# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 • இதழ் Issue : 165 • வெள்ளிக்கிழமை Friday • 11.09.2026 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode


# மதுராந்தகத்தில் மரகதம் குமாரவேல், தாராபுரத்தில் சத்தியபாமா போட்டி



## தவெக வேட்பாளர்கள் அறிவிப்பு

சென்னை: மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அக்டோபர் 6-ம் தேதி நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள நிலையில் அத்தொகுதிகளுக்கான வேட்பாளர்களை தவெக அறிவித்துள்ளது.

அதன்படி மதுராந்தகம் (தனி) தொகுதியில் மரகதம் குமாரவேல், தாராபுரம் (தனி) தொகுதியில் சத்தியபாமா போட்டியிடுவார்கள் என்று தவெக தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வரும், தவெக தலைவருமான விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வருகிற அக்டோபர் 6 அன்று நடைபெறவுள்ள மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி) ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளின் இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில் தவெக வேட்பாளர்களாக மதுராந்தகம் (தனி) - மரகதம் குமாரவேல், தவெக துணைப் பொதுச் செயலாளர், தாராபுரம் (தனி) - சத்தியபாமா, திருப்பூர் தென்கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

தவெகவினர் அனைவரும்வெற்றிஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்து, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை பெற்றுத்தர வேண்டுகிறேன்," என்று குறிப்பிட்டுள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் சூழல் காரணமாக அதிமுகவைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் தங்கள் பதவியை ராஜினாமாசெய்துவிட்டு தவெகவில் இணைந்தனர். அதிமுக எம்எல்ஏ-க்களாக தேர்ந்தெடுக்கப் பட்ட மதுராந்தகம் மரக தம் குமர வேல், தாராபுரம் சத்தியபாமா, பெரு ந்து றை ஜெயக்குமார், அம் பா சமுத்திரம் இசக்கி சுப்பையா, விராலிமலை சி. விஜயபாஸ்கர், கரூர் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் தங்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினமா செய்வதாக சபாநாயகர் ஜே.சி.டி.பிராபாகரிடம் கடிதம் கொடுத்துவிட்டு தவெகவில் இணைந்தனர். இவர்களின் ராஜினாமாவை பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் ஏற்றுக் கொண்டதையடுத்து அந்த தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டன. இந்நிலையில், மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

அதன்படி வேட்புமனு தாக்கல் செப்.9 (நேற்று) தொடங்கியது. வேட்புமனு தாக்கல் செய்ய செப்.16 கடைசி நாள். வேட்புமனு மீதான பரிசீலனை செப்.17-ம் தேதி நடைபெறும்.

வேட்புமனுவை திரும்பப் பெற செப்.19 கடைசி நாள். தேர்தலில் பதிவான வாக்குகள் அக்.-9ம் தேதி எண்ணப்படுகிறது.

தவெக ஆட்சி அமைந்த பின்னர் நடைபெறும் முதல் இடைத்தேர்தல் என்பதால், இதன் மீது மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டது. இந்நிலையில், வேட்புமனு தொடங்கிய நாளான நேற்று,

திமுக இந்த இரண்டு தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்தது.மதுராந்தகத்தில் இ.பரந்தா மன், தாராபுரத்தில் எஸ்.சுகன்யா ஆகியோரை திமுக வேட்பாளர்களாக அறிவித்தது. இதில் பரந்தாமன் திமுகவின் சட்டத்துறை இணைச் செயலாளராக பொறுப்பு வகிக்கிறார்.

நிஞரான இவர், 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னை எழும்பூர் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். தற்போது 2-வது முறையாக அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு தரப்பட்டுள்ளது. கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த சுகன்யாவும் வழக்கறிஞர். திமுகவில் மகளிரணி நிர்வாகியான இவருக்கு, இம்முறை தாராபுரம் தொகுதியில் போட்டியிட தலைமை வாய்ப்பு அளித்தது.

இதனைத் தொடர்ந்து தவெகவும் இன்று வேட்பாளர்களை அறிவித்துள்ளது. தவெக வேட்பாளர்கள் இருவருமே அத்தொகுதியில் வெற்றி பெற்று பின்னர் பதவியை ராஜினாமா செய்தவர்கள் என்பது குறிப்பிட த்தக்கது.

# மிசா என்பது பஞ்சு மெத்தையில் உருள்வதல்ல; சிறையில் ரத்தம் சிந்திய நிஜம்; முதலமைச்சர் விஜய்க்கு தி.மு.க. பதிலடி



சட்டசபையில் மிசா குறித்து முதல்-அமைச்சர் விஜய் பேசியதற்கு திமுகவினர் மற்றும் பல்வேறு தரப்பில் இருந்து கண்டனங்கள் வலுத்து வருகின்றனர். இன்று காலை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மிசா நடவடிக்கையின் போது சிறையில் நடந்தது குறித்து வீடியோ வெளியிட்டு விளக்கமாக பேசினார்.

இதற்கு பதில் அளித்த தவெக ஐடி விங், "பல ஆண்டுகளாகக் கட்டமைக்கப்பட்ட "சிறை சென்ற தியாகி" என்ற போலி பிம்பம் உடைந்ததில் பதற்றம் பற்றிக்கொண்டதோ? என விமர்சித்தது. இந்த நிலையில், தவெக ஐடி விங்கிற்கு பதில் அளிக்கும் விதமாக திமுக ஐடி விங் காட்டமான பதிவை ஒன்றை வெளியிட்டுள்ளது.

எச்சில் பழம் பொறுக்கும் அணில்கள் கண்ணை மூடிக்கொண்டால், உழைப்பாலும் தியாகத்தாலும் கட்டமைக்கப்பட்ட திமுகவின் வரலாறு இருண்டு போய்விடாது! ஊர் முழுவதும் பொய்யைப் பரப்பும் சாக்கடைக் கூட்டத்தை அம்பலப்படுத்த அரசியல் நாகரிகத்தோடு எங்கள் தலைவர் அளித்த விளக்கம், அந்தத் தற்குறிகளுக்கானது அல்ல; அவர்களின் பொய்யை நம்பி அப்பாவி மக்கள் மீண்டும் ஒருமுறை ஏமாந்து விடக் கூடாது என்பதற்காகத்தான்.

வரலாறு, தியாகம் என்றால் என்னவென்றே தெரியாமல், சமூக வலைதளங்களில் பொய்யையும் அவதூறையும் வாந்தியெடுக்கும் Abuser பொறுக்கிகள் நடத்தும் கட்சிதான் தவெக என்பதை மறுபடியும் தாங்கள் எடுத்த வாந்தியால் நிரூபித்து இருக்கிறார்கள். மூளையும் மூஞ்சியும் இல்லாமல், தந்தையின் தயவால் சினிமாவில் வளர்ந்து, ஏசி கேரவனுக்குள் பவுடர் பூசி, டூப் வைத்துச் சண்டை போட்ட இந்தத் தற்குறிக்கு, சிறைக் கொட்டடியில் மிசா கைதிகள் போலீசாரின் பூட்ஸ்காலால் மிதிபட்டுச் சிந்திய ரத்தத்தின் மதிப்பு எப்படித் தெரியும்?

பத்திரிகையாளர்களை நேருக்கு நேர் சந்திக்கத் துப்பில்லாமல், சட்டமன்றத்தில் கேட்ட கேள்விக்கான பதிலுரைக்கு மூன்று நாட்கள் மனப்பாடம் செய்து, கேமரா முன்னால் கத்தி, கதறி நடிக்கும் தற்குறிக்கு நிஜ வலிகளின் உணர்வு எப்படிப் புரியும்? மிசா தியாகம் என்பது, சினிமாவில் நடிப்பது போல, பின்னாடி கையை வைத்து தடவிக்கொண்டு பஞ்சு மெத்தையில் உருள்வதல்ல; அது கொள்கை உறுதி மாறாமல், சிறைச்சாலையின் இரும்புக் கம்பிகளுக்கிடையே ரத்தம் சிந்திய நிஜம்! Call sheet காப்பியையும், வருமானத்தை மறைத்து வாங்கிய IT Raid காப்பியையும், வசனகர்த்தாக்கள் எழுதிக்கொடுக்கும் Script பேப்பரையும் மட்டுமே பார்த்துப் பழகிய மூளையே! உனக்கு எமர்ஜென்சி காலத்தில் நடந்த மிசா கொடூரங்களை ஆவணப்படுத்திய இஸ்மாயில் கமிஷன் அறிக்கை எனும் வரலாற்று ஆவணத்தைப் படித்துப்புரிந்துகொள்ளும் வக்கு எங்கே இருக்கப் போகிறது?

முத்தமிழறிஞர் கலைஞர் அணிந்திருந்த 'மஞ்சள் துண்டு', இந்த மாநிலத்தின் சமூகநீதியைக் காத்த சுயமரியாதைக் குறியீடு! ஆனால், இந்த டம்மி முதல்- அமைச்சரின் மேக்கப்பை கலைத்துவிட்டால், உள்ளே மிஞ்சுவது வெற்று அரசியல் சூனியமும், நிர்வாகத் திறமையின்மையும்தான். நீங்கள் விமர்சி க்கும் அந்த 'கட்டுமரம்', இந்தியாவின் பல அரசியல் சுனாமிகளையே நெஞ்சை நிமிர்த்தி எதிர்கொண்டு தமிழ்நாட்டைக் காத்தது மாபெரும் வரலாறு! அதில் ஒன்றுதான் எங்கள் தலைவரும் கழக உடன்பிறப்புகளும் மிசா சிறைவாசத்தை எதிர்கொண்ட எமர்ஜென்சி எனும் நெருக்கடி நெருப்பாறு. கொள்கை, சித்தாந்தம் எதுவும் இல்லாமல், தியாகிகளைக் கொச்சைப்படுத்தி அரசியல் செய்ய நினைக்கும் உங்கள் அநாகரிகச் சாக்கடையிலேயே, தவெக எனும் காகிதக் கப்பல் மூழ்கும்.

இதோ அந்த எமர்ஜென்சி காலத்து மிசா சிறைவாசம் தொடர்பான வராலற்று ஆதாரங்கள். குரைக்கும் விலங்குகளே கவ்விக் கொண்டு ஒடுங்கள். வரலாற்றில் நிலைத்து நிற்கும் மாபெரும் தியாகத்தை உருவ கேலி செய்த உங்களின் கேடுகெட்ட அற்பத்தனத்தை தமிழ்நாட்டு மக்கள் காரித் துப்புகிறார்கள். காரணம், இந்த ஆவணங்களில் உள்ள பதிவுகளை அவர்கள் தங்கள் நெஞ்சில் பதிய வைத்திருக்கிறார்கள்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குருப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


# ஈரோடு உட்பட 17 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு



சென்னை உட்பட 17 மாவட்டங்களில் (வெள்ளிக்கிழமை) மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகவெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

சுமார் 0.9 கிமீ உயரத்தில் தெற்கு உள் கர்நாடகா முதல் மன்னார் வளைகுடா வரை தமிழக பகுதிகள் வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது.

11-09-2026: தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும்.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், சேலம்,நாமக்கல்,ஈரோடு, திருச்சிராப்பள்ளி,அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், புதுவையிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஒரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். 12-09-2026: மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.தென் கடலோர தமிழகத்தில் ஒரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.

13-09-2026 மற்றும் 14-09-2026: தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். 15-09-2026: விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கன மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

# தாகூர் பொறியியல் கல்லூரியில் 29வது மாணவர் அறிமுக நாள் விழா

## செயற்கை நுண்ணறிவு மாணவர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும் - Zoho AI ஆராய்ச்சி இயக்குநர் ராம்பிரகாஷ் ராமமூர்த்தி பேச்சு



ரத்தினமங்கலத்தில் அமைந்துள்ள தாகூர் பொறியியல் கல்லூரியில் 29வது மாணவர் அறிமுகநாள் விழாதிங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. கல்விப் பயணத்தின் புதிய அத்தியாயத்தை தொடங்கும் முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்று, அவர்களுக்கு வழிகாட்டும் நோக்கில் இந்த நிகழ்ச்சி கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறைப் புலத் தலைவர் டாக்டர் என்.எஸ்.இளங்கோவன் வரவேற்புரையாற்றினார்.

தொடர்ந்து கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ். நாகராஜன் நிறுவன அறிக்கையை சமர்ப்பித்து, கல்லூரியின் கல்வி வளர்ச்சி, ஆராய்ச்சி சாதனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட Zoho மற்றும் ManageEngine நிறுவனங்களின் செயற்கை நுண்ணறிவு (AI) ஆராய்ச்சி இயக்குநர் திரு. ராம்பிரகாஷ் ராமமூர்த்தி,மாணவர்களுக்கான தொடக்க உரையை வழங்கினார்.

அவர் தனது உரையில், தற்போதைய தொழில்நுட்ப உலகில் செயற்கை நுண்ணறிவின் முக்கியத்துவம்நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்டார். மேலும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பல்வேறு துறைகளில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி வருவதோடு, உற்பத்தித் திறனை உயர்த்தி, புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்து, வேலைவாய்ப்புகளையும் உருவாக்கி வருவதாக தெரிவித்தார்.

மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களில் தங்களது திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், எதிர்கால சவால்களை எதிர்கொள்ள புதுமை சிந்தனை மற்றும் தொடர்ச்சியான கற்றல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரியின் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர். புதிய மாணவர்களுக்கு கல்லூரி வாழ்க்கை, கல்வி வாய்ப்புகள் மற்றும் ஆராய்ச்சி துறைகளில் கிடைக்கும் முன்னேற்றங்கள் குறித்து அறிமுகம் வழங்கப்பட்டது.



# உலக தற்கொலை தடுப்பு தினம்: நந்தியாளத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

ராணிப்பேட்டை, செப்.10: உலக தற்கொலைதடுப்புதினத்தை முன்னிட்டு ராணிப்பேட்டை மாவட்டம் நந்தியாளம் கிராமத்தில் அலங்கார் காபி ஷாப் எதிரே சி.எம்.சி. மருத்துவமனை மற்றும் சி.எம்.சி. நர்சிங் கல்லூரி சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

சி.எம்.சி. நர்சிங் கல்லூரி ஆசிரியர் ஜூலிஸ் ஜான் சாமுவேல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், நந்தியாளம் ஊராட்சி மன்றத் தலைவர் தேவி பூபாலன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் தற்கொலைதடுப்பு,மனநலப் பாதுகாப்பு மற்றும் மனஅழுத்தத்திலிருந்து மீள்வதற்கான வழிமுறைகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுபவர்கள் தகுந்த ஆலோசனை மற்றும் மருத்துவ உதவியை நாட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

மருத்துவப் பணியாளர்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கினர். தொடர்ந்து, தற்கொலை தடுப்பு மற்றும் மனநலப் பாதுகாப்பு குறித்த உறுதிமொழியும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

### ஆயிரப்பேரி ஊராட்சி மூலம்

# பழைய குற்றாலம் வாகன நிறுத்த கட்டணம் வசூலுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி

## மதுரை உயர் நீதிமன்றக்கிளை உத்தரவு



தென்காசி மாவட்டம் ஆயிரப்பேரி ஊராட்சி மூலம் பழைய குற்றாலம் வாகன நிறுத்த கட்டணம் ஏலம் விடப்பட்டு வசூல் நடைபெற்று வரும் நிலையில் அதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கினை மதுரை உயர் நீதிமன்றக்கிளை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

தென்காசி மாவட்டம், பழைய குற்றாலம் அருவிக்குச் செல்லும் வழியில்ஆயிரப்பேரிஊராட்சி மூலம் ஏலம் விடப்பட்டு சட்டவிரோ தமாக டோல் கேட் கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும்,அதற்கு தடை கோரியும் தாக்கலான வழக்கில், 'அது டோல் கேட்' அல்ல. வாகன நிறுத்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது,' என அரசு தரப்பு தெரிவித்ததால் வழக்கை தள்ளுபடி செய்தது உயர்நீ திமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பகுதியை சேர்ந்த வீரபாண்டியன் என்பவர் உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்த பொதுநல மனுவில்

பழைய குற்றால அருவிக்கு 1.5 கி.மீ., முன்பாகவே ஆயிரப் பேரி ஊராட்சி சார்பில் டோல்கேட்' அமைத்து வாகன கட்டணம் வசூலிக்கப் படுகிறது.

பழைய குற்றாலத்தில் சம்பந்தப்பட்ட ரோடு நெடுஞ் சாலத்துறைக்கு சொந்தமானது.

அருவி அமைந்துள்ள பகுதி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குட்பட்டது. இங்கு டோல்கேட் அமைக்க உள்ளாட்சி அமைப்பிற்கு அதிகாரம் இல்லை.

மேலும் அங்கு வழங்கப்படும் ரசீதில் ஜி.எஸ்.டி., சேர்க்கப் பட்டுள்ளதாக குறிப்பிட்டாலும் அதற்கான பதிவு எண் இல்லை. இதன் மூலம் வரி ஏய்ப்பு நடக்கிறது. அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே டோல்கேட்'செயல்பட தடை விதிக்க வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த வழக்கை நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன்,ஆர்.சக்திவேல் அமர்வு விசாரித்தது.

அரசு தரப்பு வழக்கறிஞர்:அது டோல் கேட்கட்டணம் அல்ல. வாகன நிறுத்தக்கட்ட ணம். இதற்கு முறையாக ஏலம் விடப்பட்டு வசூலிக்கப்படுகிறது.ஏற்கனவே இதுபோல் ஒரு வழக்கு தாக்கலாகி வாபஸ் பெறப்பட்டதால், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றார். இதை பதிவு செய்த நீதிபதிகள் மனுவை தள்ளுபடி செய்தனர்.



# திருவூர் அரசு மாதிரி உயர்நிலைப்பள்ளியில் முப்பெரும் விழா

திருவள்ளூர் மாவட்டம் திருவூர் அரசு மாதிரி உயர்நிலைப்பள்ளியில் தமிழ் மன்றம் , அறிவியல் மன்றம் மற்றும் கணித மன்றம் திறப்பு விழா என முப்பெரும் விழா தலைமையாசிரியை ச.மலர்கொடி அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது , தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் தலைவர் சா.அருணன் வரவேற்றார் ,உதவி தலைமையாசிரியர் பாகிரதிசாரதி , ஆசிரியர்கள் சுரேஷ், ஷீலா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்,சிறப்புவிருந்தினராக மணவாளநகர் நடேசன் செட்டியார் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் எஸ்.ஞானசேகரன் , மணவாளநகர் பள்ளி உதவி தலைமையாசிரியர் முனைவர் சே.பிரபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு முப்பெரும் மன்றங்களை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினர் , மாணவர்கள் தாங்கள் அறிவியல் சார்ந்த பல வடிமைப்புகளை செய்து அதன் செய்முறைகளை செய்து கட்டினர் கணிதம் குறித்தானசிறப்புகளைவிளக்கினர் தமிழ் மொழியின் சிறப்புகள் பழங்கால இலக்கியம் என மாணவர்கள் தனங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர் நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் ராஜேஷ்கண்ணா, மகாலட்சுமி, லட்சுமி, லதா, சுனேத்திரா, கலியபெருமாள், சிறப்பு பயிற்சியாளர் பவானி , பிரபாகரன், மணிமாறன்,டில்லி ஆகியோர் மாணவ மாணவிகள் திரளாக கலந்துக்கொண்டனர் முடியவில் தமிழாசிரியர் கோபிநாத் நன்றி கூறினார்

# கோவையில் ஒரே நாளில் 100க்கும் மேற்பட்ட எஸ்யூவி கார்களை டெலிவரி செய்து மாருதி சுசுகி சாதனை

## ஒரே இடத்தில் கார்களை பெற்று கொண்டதில் வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சி



கோவையில் முதல்முறையாக மாருதி சுசுகி நிறுவனம் சார்பில் 100-க்கும் மேற்பட்ட பிரெஸ்ஸா மற்றும் விக்டோரிஸ் எஸ்யூவி கார்களை ஒரே நாளில் வாடிக்கையாளர்களுக்கு டெலிவரி செய்து புதிய சாதனை படைத்துள்ளனர். கோவை மாருதிசுசுகிடீலர்களான அம்பாள் ஆட்டோ,ஏபிடி, ஆதி மாருதி மற்றும் ஜெய்கிருஷ்ணா சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மாருதி சுசுகியின் கோவை ஏரியா மேனேஜர் தேவான்சு மான் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, வாடிக்கையாளர்களுக்கு கார் சாவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் அம்பாள் ஆட்டோ நிர்வாக இயக்குநர் அனீஷ்,ஆதி மாருதி நிர்வாக இயக்குநர் ஸ்ரீனிவாசன், ஜெய்கிருஷ்ணா நிர்வாக இயக்குநர் பிரவீன் மற்றும் ஏபிடி நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி, மது பண்ணாங் ஆகியோர் பங்கேற்றனர். மேலும், புதிய கார்களை டெலிவரி பெற்ற வாடிக்கையாளர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இதுகுறித்து தேவான்சு மான் கூறியதாவது:

கொங்குமண்டலத்தில் முதல்முறையாக 100-க்கும் மேற்பட்ட பிரெஸ்ஸா மற்றும் விக்டோரிஸ் எஸ்யூவி வாகனங்களை ஒரே நாளில் வாடிக்கையாளர்களுக்கு டெலிவரி செய்து சாதனை படைத்துள்ளோம். இது எங்களுக்கு மிகவும் முக்கியமான மைல்கல்லாகும். புதிய பிரெஸ்ஸா மற்றும் மிட்-எஸ்யூவி பிரிவில் உள்ள விக்டோரிஸ் ஆகிய மாடல்களுக்கு கோயம்புத்தூர் சந்தையில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. எஸ்யூவி பிரிவில் தொடர்ந்து பல்வேறு சாதனைகளை படைப்போம், என்றார்.

மாருதி சுசுகியின் டெரிட்டரி மேனேஜர் சாம் கூறியதாவது: கோயம்புத்தூரில் முதல்முறையாக இந்தப் பிரிவில் 100-க்கும் மேற்பட்ட எஸ்யூவி கார்களை ஒரே நாளில் டெலிவரி செய்துள்ளோம். கோயம்புத்தூர் சந்தையில் எஸ்யூவி வாகனங்களுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்போது சந்தையில் விற்பனையாகும் வாகனங்களில் சுமார் 50 சதவீதம் எஸ்யூவி பிரிவைச் சேர்ந்தவை. மாருதி சுசுகியின் விக்டோரிஸ் மற்றும் பிரெஸ்ஸா மாடல்கள் கோவை சந்தையில் விற்பனையை மேலும் அதிகரிக்கும் என நம்புகிறோம், என்றார்.

நிகழ்ச்சியில் கோ ம்புத்தூர் மாருதி சுசுகி டெரிட்டரி மேலாளர்கள் சாம், ரோஹித் மற்றும் ஏராளமான வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டு கார்களை பெற்று மகிழ்ச்சியுடன் சென்றனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மதுரை மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பில் நடைபெற்ற எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் வெளியிட்டுள்ள HIV சுய பரிசோதனைக்கான QR குறியீட்டை வெளியிட்டு ஏச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு ஒட்டுவில்லையினை ஆட்டோக்களில் ஒட்டி,பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு மனித சங்கிலியை தொடங்கி வைத்து பங்கேற்றார். தொடர்ந்து, எய்ட்ஸ் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு உறுதிமொழியை பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் உயர்திரு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஏற்றுக்கொண்டனர்



கோவை மாவட்டம் சர்க்கார் சாமக்குளம் பகுதியில் உள்ள

# அரசு பள்ளியில், சி.ஆர். சுவாமிநாதன் ஒருங்கிணைந்த ஆய்வகக் கட்டிடத் திறப்பு விழா

## கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்

சி.ஆர்.எஸ். நினைவு அறக்கட்டளையின் நிதியுதவியின் கீழ் கட்டப்பட்டுள்ள சி. ஆர். சுவாமிநாதன் ஒருங்கிணைந்த ஆய்வகக் கட்டிடத்தின் திறப்பு விழா, கோவை மாவட்டம், கோவில்பாளையம், அடுத்த சர்க்கார் சாமக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கோவை மாவட்ட ஆட்சியர்பவன்குமார் கிரியப்பனவர், ஒருங்கிணைந்த ஆய்வகக் கட்டிடத்தைத் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். கோவை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கிருஷ்ணபிரியா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மேலும், சி.ஆர்.எஸ். நினைவு அறக்கட்டளையின் நன்கொடையாளர்கள், கோவை குடியிருப்போர் விழிப்புணர்வு சங்கமான ராக் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு முக்கியப் பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ராக் அமைப்பின் நிறுவனர், சௌந்தரராஜன், அறக்கட்டளைக் குழுவின் தலைவர் பாலசுந்தரம், ராக் அமைப்பின் தலைவர் பாலசுப்பிரமணியன்பள்ளித் தலைமை ஆசிரியை விமலா,பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். சி.ஆர்.எஸ். நினைவு அறக்கட்டளை அரசு பள்ளிகளில் நிலவும் முக்கியமான உள்கட்டமைப்புக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

குறிப்பாக, கிராமப்புற மற்றும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தரமான கல்விக்கான வாய்ப்புகளை மேம்படுத்தி, அவர்களுக்கு சிறந்த கல்விச் சூழலை உருவாக்குவதே இம்முயற்சியின் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மாணவர்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வகையில் நவீன கணினி ஆய்வகம், வேதியியல் ஆய்வகம், இயற்பியல் ஆய்வகம் மற்றும் உயிரியல் ஆய்வகம் ஆகியவை தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வகக் கட்டிடம் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கான முன்மாதிரியான ஒருங்கிணைந்த ஆய்வகக் கட்டிடமாக உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பாடப்புத்தக அறிவுடன் மட்டுமின்றி, செய்முறைப் பயிற்சி மற்றும் நேரடி ஆய்வுகளின் மூலம் அறிவியல் அறிவைப் பெறுவதற்கும், அவர்களின் ஆர்வம், சிந்தனைத்திறன் மற்றும் ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்ப்பதற்கும் இவ்வசதி பெரிதும் உதவும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.1.8 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்டம், நம்பியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாயவிலைக்கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 09.09.2026 அன்று ஆய்வு மேற்கொண்டார்.

# விக்சித் பாரத் இளம் தலைவர்கள் கலந்துரையாடல் 2027: ஈரோடு மாவட்ட இளைஞர்களுக்கு அழைப்பு




இந்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மேரா யுவ பாரத் (MY Bharat) சார்பில், "விக்சித் பாரத் இளம் தலைவர்கள் கலந்துரையாடல் - 2027"(VBYLD 2027)தேசிய அளவில் நடத்தப்பட உள்ளது. 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் திறமை, தலைமைத்துவம், புதுமைசிந்தனைமற்றும் சமூகப் பொறுப்புணர்வை மேம்படுத்தி, 'வளர்ந்த இந்தியா@2047' என்றஇலக்கைஅடைவதில் அவர்களின் பங்களிப்பை அதிகரிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இப்போட்டியில் Viksit Bharat Challenge, Cultural Track, Design for Bharat, Hack for Social Cause, Youth Entrepreneurs Challenge மற்றும் Youth Parliament என ஆறு முக்கிய பிரிவுகளில் இளைஞர்கள் பங்கேற்கலாம். Viksit Bharat Challenge போட்டியின் கீழ் வினாடி வினா, கட்டுரை மற்றும் விளக்கக்காட்சி உள்ளிட்ட பல்வேறு கட்டங்களின் மூலம் திறமையான இளைஞர்கள் தேர்வு செய்யப்படுவர். தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் "Blue Economy, Human Capital & Global Competitiveness" என்ற பிராந்திய கருப்பொருளின் அடிப்படையில்பங்கேற்கின்றன. நாட்டுப்புற நடனம், நாட்டுப்புற பாடல், ஓவியம், பேச்சுப்போட்டி மற்றும் கவிதை எழுதுதல் உள்ளிட்டகலாச்சாரப்போட்டிகளும் நடத்தப்பட உள்ளன. புதுமை, தொழில்முனைவோர் திறன் மற்றும் இளைஞர் நாடாளுமன்றம் ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

17.08.2026 முதல் 30.09.2026 வரை முதற்கட்டமாக விக்சித் பாரத் வினாடி வினா போட்டி நடைபெறும். தொடர்ந்து கட்டுரை, மாவட்ட அளவிலான சாம்பியன்ஷிப் மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடைபெற்று, இறுதியாக 10.01.2027 முதல் 12.01.2027 வரை புதுதில்லியில் தேசிய அளவிலான VBYLD நிகழ்வு நடைபெறும்.

17.08.2026 அன்று 15 முதல் 29 வயதுக்குட்பட்ட தகுதியுடைய இளைஞர்கள் இந்நிகழ்வில் பங்கேற்கலாம். ஆர்வமுள்ள இளைஞர்கள் MY Bharat இணையதளம் (mybharat.gov.in) மூலம் பதிவு செய்து பங்கேற்கலாம். ஏற்கனவே MY Bharat தளத்தில் பதிவு செய்துள்ளவர்கள் மீண்டும் பதிவு செய்ய தேவையில்லை. ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியான இளைஞர்கள் அதிக அளவில் பங்கேற்று,தங்களது திறமை மற்றும் புதிய சிந்தனைகளை தேசிய அளவில் வெளிப்படுத்தி, விக்சித் பாரத் உருவாக்கத்தில் தங்கள் பங்களிப்பை வலுப்படுத்துமாறு மேரா யுவ பாரத் (MY Bharat) ஈரோடு மாவட்ட துணை இயக்குநர் ரெம்யா. தெரிவித்துள்ளார்.

கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள

# இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்கள் ஒருங்கிணைத்த ராயல் எக்ஸ்போ 2026 எனும் கண்காட்சி, அனைவரையும் வெகுவாக கவர்ந்துள்ளது



கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இளங்கலை மேலாண்மை கணினி பயன்பாடு மற்றும் தளவாடங்கள் துறை சார்பாக "ராயல் எக்ஸ்போ 2026" எனும் கண்காட்சி நடைபெற்றது.

கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இதற்கான துவக்க விழா இந்துஸ்தான் கல்லூரி நிறுவனங்களின் செயலாளர் சரஸ்வதி கண்ணையன், துணை செயலாளர் பிரியா சதீஷ் பிரபு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது..

இதில் , கல்லூரியின் முதல்வர் பொன்னுசாமி முன்னிலை வகித்தார்..

விழாவில் சிறப்பு விருந்தினர்களான கொடிசியா நிர்வாக குழு உறுப்பினர் தினேஷ் குமார்,அக்ரி இன்டெக்ஸ் துணைத் தலைவர் விஜயகுமார் மற்றும் தன்னம்பிக்கை பேச்சாளரும்,கவிஞருமான 'தமிழ் இளவல்' மதுரை ராமகிருஷ்ணன்,

ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சியை ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தனர்..

இதில்,இந்துஸ்தான் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் செண்பகவள்ளி மற்றும் துறை தலைவி சபிதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்..

இவ்விழாவில் மாணவ மாணவிகள் 50க்கும் மேற்பட்ட அரங்குகளை அமைத்து அதன் மூலம் தங்களுடைய மேலாண்மை மற்றும் தொழில் முனைவோர் திறனை வெளிப்படுத்தினர்.

இதில் கோவை சார்ந்த பல கல்லூரிகளில் இருந்து மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தங்களுடைய மேலாண்மை திறனை வளர்த்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக 'தமிழ் இளவல்' மதுரை வெ. ராமகிருஷ்ணன் கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவர்களுடன் சிறப்பு அமர்வை நடத்தினார்.

கல்வியே சிறந்த ஆயுதம்" என்ற தலைப்பில் உரையாற்றிய அவர், எதிர்காலத்தில் ஏற்படவுள்ள நிஜ உலக மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் கல்வி மற்றும் திறன்களில் சிறந்து விளங்க மாணவர்களை ஊக்குவித்தார்.

# இலவச வேஷ்டி, சேலை கூலி உயர்வு பெற விசைத்தறி கூட்டமைப்பு கூட்டத்தில் தீர்மானம்



தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஈரோடு டெக்ஸ்வேலி கூட்ட அரங்கில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் எல்.கே.எம்.சுரேஷ், மாநில செயலாளர் இரா. வேலுச்சாமி, மாநில பொருளாளர் கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் தலைமை தாங்கினர். இக்கூட்டத்தில் இலவச வேஷ்டி-சேலை நெய்வதற்கான கூலி உயர்வு சம்பந்தமாக, உடனடியாக துறை அமைச்சரை நேரில் சந்தித்து விரிவாக எடுத்துரைத்து, கூலி உயர்வை பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்வது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மேலும் 2026-ஆம் ஆண்டு பொது பட்ஜெட்டில் விசைத்தறி தொழிலுக்கு எந்தவித அறிவிப்பும் வெளியிடப்படாதது பெரும்ஏமாற்றம்அளிப்பதாகவும், விசைத்தறி தொழிலாளர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி, தொழிலைக் காப்பாற்ற அரசு முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து, சைமா சங்கத்தில் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு உறுப்பினராக இருக்கும் கூட்டமைப்பின் தலைவர் எல்.கே.எம்.சுரேஷ் வாட்ஸ்அப் குழுவில் இருந்து நீக்கப்பட்டு மீண்டும் இணைக்கப்பட்டதை, சைமா சங்கத்திலிருந்து நீக்கப்பட்ட தாக தவறாக வாட்ஸ்அப் குழுக்கள் மூலம் பரப்பியதை இக்கூட்டமைப்பு வன்மையாக கண்டித்ததுடன், தகவல்களை பரப்புபவர்கள் மீது சட்டப்படி கடும்நடவடிக்கைஎடுக்கவும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# ரேஷன் கடைகளில் வரவேற்பு பெற்ற வெங்காய விற்பனை திட்டம் ஒரே நாளில் நிறுத்தம்



திருச்சி: மானிய விலையில் ரூ.35-க்கு வெங்காயம் விற்பனை செய்யும் திட்டம் திருச்சியில் ஒரேநாளுடன் நின்றுபோனது. நுகர்வோரிடம் பெரிதும் வரவேற்பு பெற்ற இத்திட்டத்தை, வெங்காயம் விலை வெளிச்சந்தையில் ரூ.35 ஆக குறையும்வரை தொடரவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

வெளிச்சந்தையில் பெரியவெங்காயம்கிலோ ரூ.80 வரை விற்பனையாவதால் மக்கள் கவலை அடைந்தனர். இதையடுத்து, தமிழக அரசு நகர்ப் பகுதிகளில் உள்ள ரேஷன் கடைகளில் மானியவிலையில்கிலோ ரூ.35-க்கு பெரிய வெங்காயம் விற்பனை செய்யும் திட்டத்தை செப்.3-ம் தேதி தொடங்கியது.

இதில் திருச்சி மாநகரில்முதற்கட்டமாகஅதிக ரேஷன் கார்டுகள் உள்ள 100 கடைகளில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இதற்காக கார்டுக்கு ஒரு கிலோ வீதம் கணக்கிடப்பட்டு 10 டன் வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டு, கடைக்கு தலா 100 கிலோ வீதம் அனுப்பப்பட்டது. இதில் 2 கிலோ கழிவு அனுமதிக்கப்பட்டதால் ரேஷன் கடைக்காரர்கள் 98கிலோ வெங்காயத்துக்கு மட்டும் பணம் செலுத்தினர்.

ரேஷன் கடைகளில் மானிய விலையில் வெங்காயம் வழங்கும் திட்டத்தில், இத்திட்டம் தொடங்கிய சில மணி நேரங்களிலேயே வெங்காயம் முழுவதும் விற்று தீர்ந்தது. அதன்பிறகு ஒரு வாரம் ஆகியும் ரேஷன் கடைகளுக்கு வெங்காயம் விற்பனைக்கு கொண்டு வரப்படவில்லை. இதனால், மானிய விலையில் வெங்காயம் வாங்க காத்திருந்த மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

பெரிதும் பயனுள்ள இத்திட்டத்தை பாரபட்சமின்றி அனைத்துரேஷன் கடைகளுக்கும் விரிவுபடுத்தி, வெளிச்சந்தையில் கிலோ வெங்காயம் ரூ.35-க்குக் கீழ் குறையும் வரை தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதுகுறித்து மாவட்ட வழங்கல் அலுவலர்கள் கூறியது:திருச்சி மாவட்டத்துக்கு முதற்கட்டமாக வரப்பெற்ற 10 டன் வெங்காயம் முழுமையாக விற்று தீர்ந்துவிட்டது. மக்களிடம் கிடைத்த வரவேற்பு காரணமாக அடுத்த கட்டமாக வெங்காயம் அனுப்புமாறு கேட்டிருக்கிறோம். இன்னும்வரவில்லை. திருச்சி மாவட்டத்துக்கான வெங்காய ஒதுக்கீடு வரப்பெற்றதும் ரேஷன் கடைகளுக்கு பிரித்து வழங்கப்படும் என்றனர்.



ஈரோடு மாவட்டம், நந்தா இயன்முறை கல்லூரி கூட்டரங்கில் மூத்த குடிமக்கள் நலன் தொடர்பான உணர்திறன் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.09.2026) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட சமூக நல அலுவலர் அம்பிகா உட்பட பலர் உள்ளனர்.

# உயர் கல்வியை தனியார் மயமாக்கும் முயற்சியே தனியார் பல்கலை. திருத்த மசோதா: இந்திய கம்யூ. கண்டனம்



சென்னை: 'தனியார் பல்கலைக்கழகங்கள் திருத்த மசோதாவானது உயர் கல்வியை தனியார் மயமாக்கும் முயற்சி' என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழகச் சட்டப்பேரவையில் தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்குவதற்கான குறைந்தபட்ச நிலம் மற்றும் வைப்புநிதி தேவைகளைக் குறைக்கும் வகையில் தனியார் பல்கலைக்கழகங்கள் திருத்த மசோதா தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது உயர் கல்வியை தனியார் மயமாக்கும் முயற்சியாகும். தனியார் பல்கலைக்கழகங்களையும்,வெளிநாட்டுப்பல்கலைக் கழகங்களையும் ஊக்கப்படுத்தும் நடவடிக்கையாகும்.

ஏற்கெனவே, தவெக அரசு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா பல்கலைக்கழகம் சென்னையில் தனது புதிய சர்வதேச கிளை வளாகத்தை நிறுவ உள்ளது. இதற்கு தவெக அரசு அனுமதி வழங்கியுள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

தனியார் பல்கலைக் கழகங்களில் இட ஒதுக்கீடு நடைமுறைபடுத்தப்படுவதில்லை.

எனவே இது சமூக நீதிக்கும், அடித்தட்டு சமூக மாணவர்களுக்கும் எதிராக அமையும். வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மருத்துவப் பல்கலைக் கழகங்களை திறந்திட வசதியாக, நிலத் தேவை என்பது இம்மசோதா மூலம் குறைக்கப்பட்டுள்ளது.

தனியார் பல்கலைக் கழகங்களைத் தொடங்க, குறைந்தது 100 ஏக்கர் தொடர்ச்சியான நிலம் வேண்டும் என்பது மாற்றப்பட்டுள்ளது. சென்னை பெருநகரப் பகுதிக்கு 12 ஏக்கரும், இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு 18 ஏக்கரும், இதரப் பகுதிகளுக்கு 25 ஏக்கரும் என நிலத் தேவை குறைக்கப்பட்டுள்ளது.

தனியார் பல்கலைக் கழகங்களை நிறுவுவதற்கான நிரந்தர அறக்கட்டளை நிதி தேவையும் குறைக்கப்பட்டுள்ளது. உயர் கல்வித்துறையில் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்கும் நோக்குடன் இத்தகைய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"மதுவிலக்கு மீதான நி நமது நாட்டில் உயர்கல்வி பயில தகுதியுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, நமது வேலை வாய்ப்புகள், அறிவியல் தொழில்நுட்பத் தேவைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி, பல்துறைஉழைப்புசக்திகளின் தேவை ஆகியவற்றை கருத்தில் கொண்டு அரசே போதிய உயர் கல்வி நிறுவனங்களையும், கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் துவக்குவது தான் சரியாக இருக்கும்.

அதை விடுத்து தனியார் பல்கலைக்கழகங்களையும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களையும் அதிக அளவில் துவங்குவது கல்வியை தனியார்மயமாக்கிவிடும், வணிகமயமாக்கிவிடும், கார்ப்பரேட் மயமாக்கிவிடும். ஒன்றிய அரசில் பாஜக நீடிக்கும் இன்றைய நிலைமைகளில் கல்வியை காவி மயமாக்கிவிடும்.

இத்தகையப் போக்கு, அடித்தட்டு மாணவர்களின் நலன்களுக்கு எதிராக அமைந்துவிடும். எனவே, மாணவர்களுக்கு எதிரான இந்தச் சட்டத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது. எனத் தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்டம், நந்தா இயன்முறை கல்லூரி கூட்டரங்கில் மூத்த குடிமக்கள் நலன் தொடர்பான உணர்திறன் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.09.2026) துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட சமூக நல அலுவலர் அம்பிகா உட்பட பலர் உள்ளனர்.

# "குடியரசு கட்சி வென்றால் அமெரிக்கர்களுக்கு தலா 5,000 டாலர்" அதிபர் ட்ரம்ப் வாக்குறுதி



வாஷிங்டன்: அமெரிக்க காங்கிரஸில் தனது செல்வாக்கை குடியரசுக் கட்சி தக்க வைத்துக்கொண்டால் வயது வந்த அமெரிக்கர்கள் ஒவ்வொருவருக்கும் 5,000 டாலர் வழங்கப்படும் என்று அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மக்களவை என கூறப்படும் காங்கிரஸுக்கான தேர்தல் வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ளது. தற்போது காங்கிரஸில் குடியரசு கட்சிக்கு பெரும்பான்மை உள்ளதால் அதிபர் டொனால்டு ட்ரம்ப் கொண்டு வந்த சட்டங்கள் எளிதாக நிறைவேறின.

காங்கிரஸில் பெரும்பான்மையைதக்கவைத்துக்கொள்ள திட்டமிடும் டொனால்டு ட்ரம்ப், அதைக் கருத்தில் கொண்டு முக்கிய அறிவிப்பு ஒன்றைவெளியிட்டுள்ளார்.

டல்லாஸில் நடைபெற்ற குடியரசு கட்சியின் மாநாட்டில் உரையாற்றிய டொனால்டு ட்ரம்ப், "நவம்பரில் நடைபெற உள்ள காங்கிரஸ் உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தேர்தலில் குடியரசு கட்சி வெற்றி பெறுவது மிகவும் முக்கியம்.

இந்த தேர்தலில் குடியரசு கட்சியினர் வெற்றி பெற்றால் நீங்கள் (வாக்காளர்கள்) எங்களுடன் சேர்ந்தவெற்றிபெறுவீர்கள். உங்களுக்கு 5,000 டாலர் கிடைக்கும். இது ட்ரம்ப்பின் ஈவுத்தொகை என்று அழைக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தலில்,ஈரான் விவகாரம் மிக முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஈரான் உடனான போர் தொடர்ந்து நீடித்து வருவதால், அமெரிக்காவின் செலவு கூடிக்கொண்டே இருக்கிறது. ஆயுதங்களின் இருப்பு குறைவதோடு, எண்ணெய் விலையும் உயர்கிறது. இதைக் கருத்தில்கொண்டு தனது உரையில் இது குறித்து குறிப்பிட்டுப் பேசிய டொனால்டு ட்ரம்ப், "உணவுப் பொருட்களின் விலையும் மற்ற பொருட்களின் விலையும் தொடர்ந்து குறைந்து வருகின்றன. ஈரானுடனான போரில் நாம் வெற்றி பெற்றவுடன் எண்ணெய் விலையும் குறையும்.

அமெரிக்காவை கம்யூனிஸ அலை அச்சுறுத்தி வருகிறது. அமெரிக்கா கம்யூனிச நாடாக மாறிவிடும் அபாயம் உள்ளது. அடுத்த 250 ஆண்டுகளின் தொடக்க காலத்தில் இருக்கும் நமது நாடு தடுமாறுகிறதா அல்லது முன்னோக்கிச் செல்கிறதா என்பதை உங்கள் வாக்கு தீர்மானிக்கும்" என தெரிவித்துள்ளார்.

குடியரசு கட்சி வெற்றி பெற்றால் வயது வந்த அமெரிக்கர்கள் ஒவ்வொருவருக்கும் 5,000 டாலர் வழங்குவேன் என்று ட்ரம்ப் அறிவித்திருப்பது குறித்து அமெரிக்கர்கள் சிலர் சமூக ஊடக பக்கங்களில் விமர்சித்து வருகின்றனர். இது ஈவுத்தொகை அல்ல; லஞ்சம் என்று அவர்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

தேர்தலை ஒட்டி வெளியிடப்பட்ட கருத்துக் கணிப்பில், ஆளும் குடியரசுக் கட்சி பின்னடைவைச் சந்திக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் போர் காரணமாக எரிபொருள் விலை அமெரிக்காவில் உயர்ந்துள்ளது. அதோடு, மற்ற வீட்டு உபயோகப் பொருட்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. இது அமெரிக்கர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. மேலும், ஈரான் உடனான போர் எப்போது முடியும் என்பது இன்னும் உறுதியாக தெரியாமல் உள்ளது. எனவே, எதிர்வரும் தேர்தல் டொனால்டு ட்ரம்ப்புக்கு பெரும் சவாலாக விளங்கும் என கூறப்படுகிறது.

# "ஆம்னி பேருந்து கட்டணக் கொள்ளை கூடியதுதான் தவெக ஆட்சியில் ஏற்பட்ட மாற்றமா?" பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பேச்சு



சென்னை: 'விநாயகர் சதுர்த்தி தொடர் விடுமுறையையொட்டி தனியார் ஆம்னி பேருந்துகள் வரலாறு காணாத கட்டணக் கொள்ளையில் ஈடுப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டணக் கொள்ளைக்கு எதிராக இதுவரை பெயரளவில் கூட எச்சரிக்கை விடுக்காதது கண்டிக்கத்தக்கது' என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழ்நாட்டில் வரும் 14-ஆம் தேதி விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படவுள்ளதையொட்டி அரசு விடுமுறை விடப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய இரு நாள்களானசனி,ஞாயிறு விடுமுறை என்பதால் 3 நாள்கள் தொடர் விடுமுறையைக் கொண்டாடும் வகையில், வெளியூர்களில் இருந்து சென்னைக்கு வாழும் மக்கள் தங்களின் சொந்த ஊர்களுக்கு செல்ல திட்டமிட்டுள்ளனர்.

இதைப் பயன்படுத்திக் கொண்டு நாளை செப்டம்பர் 11-ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு சென்னையில் இருந்து புறப்படும் ஆம்னி பேருந்துகளில் திருச்சிக்கு ரூ.3,999 வரையிலும், மதுரைக்குரூ.4000 வரையிலும், கோவைக்கு ரூ.6154 வரையிலும் கட்டணங்கள் நிர்ண க்கப்பட்டுள்ளன.

வரும் 14-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு சென்னைக்கு திரும்ப திருச்சியிலிருந்து ரூ.4499, மதுரையிலிருந்து ரூ.4899, கோவையிலிருந்து ரூ.4799 வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சென்னையிலிருந்து 300 கி.மீக்கும் குறைந்த தொலைவில் உள்ள கும்பகோண த்திற்கு செல்ல ரூ.3179 வரையிலும், அங்கிருந்து சென்னை திரும்ப ரூ.3419 வரையிலும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

"டுதலானவர்களுக்கு ஒருமாத ஊதியத்தைவிட அதிக தொகையாகும். வரலாறு காணாத கட்டணக் கொள்ளைக்கு எடுத்துக்காட்டு இது தான். இந்தக் கட்டணக் கொள்ளையை தனியார் ஆம்னி பேருந்துகள் ரகசியமாகக் கூட செய்யவில்லை. இந்தக் கட்டண விவரங்கள் ஆன்லைன் முன்பதிவு இணைய தளங்களில் வெளியிடப்பட்டு முன்பதிவுகள் செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து ஊடகங்களிலும் இந்தக் கட்டணக் கொள்ளை தொடர்பாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனாலும் இந்தக் கட்டணக் கொள்ளையைத் தடுக்கதவெக அரசு எதுவும் செய்யவில்லை.

திமுக ஆட்சியில் இருந்த ஐந்தாண்டுகளிலும் தனியார் ஆம்னி பேருந்துகளில் கட்டணம் கொள்ளை கொடிகட்டி பறந்தது.இது தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சியும், பிற கட்சிகளும் கண்டனம் தெரிவிக்கும் போது, பெயரளவுக்காகவாவது கட்டணக்கொள்ளையை தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதைப் போல திமுக அரசு காட்டிக் கொண்டது. ஆனால், தவெக அரசு அதையும் செய்யவில்லை. மாறாக, திமுக ஆட்சியில் தனியார் ஆம்னி பேருந்துகளில் வசூலிக்கப்பட்டதை விட 20% முதல் 50% வரை கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதுதான் தவெக ஆட்சியில் ஏற்பட்ட மாற்றமா?

தனியார் ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை ஆட்சியாளர்கள் தடுக்க வேண்டும்; அதற்காக கட்டண நிர்ணயக் குழுவை அமைக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் பல முறை ஆணையிட்டிருக்கிறது. ஆனால், கடந்த காலங்களில் அந்த ஆணைகள் மதிக்கப்படவில்லை. ஆனால், தூய சக்தி என்று கூறிக் கொள்ளும் தவெக ஆட்சியிலும் அதே நிலை தொடர்வது கவலையளிக்கிறது. தமிழக அரசு இனியாவது விழித்துக் கொண்டு தனியார் ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளைகளுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# At least 20 killed, five missing after cargo ship catches fire at Chinese port



At least 20 people have died, while five remain missing after a cargo ship caught fire while docked in a Chinese port on Thursday, state media reported.

The incident occurred aboard a foreign cargo vessel undergoing maintenance work at a shipyard in the eastern Chinese city of Qingdao, Xinhua news agency reported.

The fire broke out at around 11 am on Thursday and was extinguished by 2:30 pm (local time).

A total of 42 people were aboard, and 12 of them were safely evacuated. Five were injured and taken to the hospital, and they were in stable condition, AP reported, citing Xinhua. A witness told AFP he saw thick smoke coming from the ship.

"I saw the smoke from the ship by chance, but there was no visible fire," he stated.

"I didn't hear an explosion or smell anything," the witness added.

A photo reportedly released by Xinhua identified the ship as the 'Ocean Melody'.

LSEG ship-tracking data identified it as a Liberia-flagged dry bulk carrier that was 20 year old, Reuters reported.

According to the data cited in the report, the ship had reached the Qingdao shipyard on August 31 and has remained there since.

The shipyard is controlled by state-owned China State Shipbuilding Corporation (CSSC).

Notably, 'Ocean Melody' is a 623-foot-long bulk carrier, according to the vessel tracking website MarineTraffic. Following the tragic incident, China's President Xi Jinping issued "important instructions" to conduct a rescue of missing people on the ship, Xinhua added.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.